**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 4 of 2021

பெயர் : A. சிந்துஜா

D.W. 2

07.04.2026

**பி.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**குறுக்கு விசாரணை :**

எங்கள் அலுவலகத்தில் ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்ட பிறகு அதன் அசல் ஆவணத்தை பதிவு செய்ய யார் அதை தாக்கல் செய்திருந்தார்களோ அவரிடமோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற நபரிடமோ வழங்குவோம். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வா.சா.ஆ–3 கிரைய பத்திரத்தின் அசல் ஆவணத்தை அதை பதிவு செய்வதற்காக எங்கள் அலுவலகத்தில் டைசின் பாத்திமா குரேசி என்பவர் தாக்கல் செய்தார். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டபிறகு மேற்படி டைசின் பாத்திமா குரேசி என்பவரின் வழக்கறிஞர் லவண் என்பவரிடம் அதன் அசல் ஆவணத்தை வழங்கியுள்ளோம். மேற்படி வழக்கறிஞர் லவண் மேற்படி டைசின் பாத்திமா குரேசி என்பவரின் அதிகாரம் பெற்ற நபர் என்பதால்தான் அவ்வாறு அவரிடம் அந்த ஆவணத்தை வழங்கினோம் என்பது சரி.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.04.07 16:03:25 +0530